

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கலையரங்கம் கட்டடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 05.02.2025 அன்று திறந்து வைத்தார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா. ஐஸ்வர்யா, முதன்மைக் கல்வி அலுவலர்கூ.சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், இராஜேந்திரபுரம் கிராமத்தில், ரூ.6.11 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர்வா.சம்பத், தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, முன்னிலையில் 06.02.2025 அன்று வழங்கினார். உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### வி.ஏ.ஓ.வை மிரட்டியதாக தவறான ஆடியோ வெளியீடு!

# பா.ஜ.க. மலிவு விலை அரசியல் செய்வதா?

## தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கடும் கண்டனம்!

கள்ளக்குறிச்சி, பிப்.9-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த டிசம்பர் மாதம் பெஞ்சல் புயலின் போது வடக்கனந்தல் பேரூராட்சி பகுதியில் மக்களை சந்திப்பதற்கு சென்ற போது கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் இருப்பதே இல்லை என பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். கிராம நிர்வாக அலுவலர் தமிழரசி செல்போன் நம்பருக்கு தொடர்பு கொண்டு பேசினேன், இது போன்ற நேரங்களில் அலுவலகத்தில் இருக்க வேண்டுமா. இல்லையா? என கேட்டேன், முதலமைச்சர் கவனத்திற்கு தகவல் போய் விடும் என நான் தெரிவித்தேன், அப்போது அந்த வி.ஏ.ஓ. தமிழரசி நான் ஏரியாவில் தான் இருக்கிறேன். வருவாய் ஆய்வாளரிடம் கேளுங்கள் என தெரிவித்தார், அப்போது வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு வருவதில்லை என மாவட்ட ஆட்சியரிடமா பேச வேண்டும் அல்லது உயர் அதிகாரிகளிடமா? சொல்லனும் என எதார்த்தமாகதான் பேசினேன், அப்போது அந்த விஏஓ சொந்த ஊர் தகரை கிராமம் என தெரிவித்ததால், எனது தொகுதிக்குட்பட்ட கிராமம் என்பதால் இந்த நேரங்களில் நீங்கள் மக்களுக்கு தேவையானதை செய்து கொடுக்க வேண்டுமென கூறி விஏஓவை நேரில் வந்து பார்க்க வேண்டுமென கடமை உணர்வோடு பேசினேன்.

இந்நிலையில் வி.ஏ.ஓ. தமிழரசிக்கும் அதே அலுவலகத்தில் பணியாற்றிய கிராம உதவியாளருக்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ளது. பிப்ரவரி 4ம்தேதி கிராம உதவியாளர் விஏஓ மீது சானம் அடித்துள்ளார், அது கண்டிக்கத்தக்கது. அதே வேளையில் கடந்தாண்டு டிசம்பர் மாதம் 1ம்தேதி நான் விஏஓவிடம் பேசியதை தற்போது தனியார் தொலைகாட்சி இட்டுக்கட்டி அந்த சம்பவத்திற்கு இதனை இணைத்து தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளன. மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளை செய்ய எந்த அதிகாரியாக இருந்தாலும் பேசுவதற்கு எனக்கு உரிமை உண்டு, அதன் அடிப்படையில் தான் பேசினேன். ஆனால் நான் தவறாக யாரையும் இட்டுக்கட்டிபேசுவதோ அல்லது யாரையும் மரியாதை குறைவாக பேசுவதோ அல்லது யாரையாவது மிரட்ட வேண்டுமென்ற தோரணையில் இதுவரை பேசியதும் இல்லை. தவறாக பேசியதாக அப்படி ஒரு வார்த்தையும் வரவும் இல்லை ஆனால் 2 மாதத்திற்கு பிறகு தற்போது பாஜகவினர் மலிவு விலை அரசியல் ஆக்குகின்றனர். திராவிட மாடல் நல்லாட்சியில் அதிகாரிகளை மரியாதை குறைவாக யாரையும் நாங்கள் பேசுவது இல்லை, மேலும் மலிவு விலை அரசியல் பண்றவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்.

நாங்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் வந்தவர்கள், எங்களை உருவாக்கியவர்கள் அவர்களுடைய லட்சிய பயணத்தில் எங்களை அர்ப்பணித்துக் கொண்டு மக்களுக்காக சேவையாற்றி வருகிறோம், தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் எங்களிடத்தில் சொன்னது பொதுமக்களுக்கும் சேவை செய்ய வேண்டும், அதேபோல அதிகாரி பெருமக்களுக்கும் ஆதரவாகவும் உதவியாகவும் இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள், அதன் படி தான் நாங்கள் செயலாற்றி வருகிறோம்,



ஆகவே இச்சம்பவத்தில் எனக்கு தொடர்பு இருப்பதாக ஆடியோ ஒன்று வெளியிட்டு தவறாக தகவல் பெறப்பட்டு சம்பவத்தை சில கட்சியினர் அரசியல் ஆக்க முயற்சிக்கின்றனர் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### அ.தி.மு.க. ஆட்சியில் பொய் வழக்கு! எம்.எல்.ஏ.க்கள்

# துரை.சந்திரசேகரன் - டி.கே.ஜி.நீலமேகம் விடுதலை!

## நீதிமன்றம் உத்தரவு!

தஞ்சாவூர் பிப்.9.

அ.தி.மு.க அரசின் மது விற்பனையை ஒழிக்க வேண்டி தஞ்சையில் துண்டு பிரசுரம் வழங்கி போராடிய கழக நிர்வாகிகள் மீது தொடரப்பட்ட பொய் வழக்கிலிருந்து மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் விடுதலை செய்யப்பட்டனர்

24/07/2015 அன்று தஞ்சாவூர் ரயிலடியில் அப்போதைய அ.தி.மு.க. ஆட்சியில் மதுவை ஒழிக்க வேன்டி துண்டுப்பிரசுரம் வழங்கி போராட்டம் நடத்திய தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி. கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ து.செல்வம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, தஞ்சை மாநகரச் செயலாளர் சண். இராமநாதன், பகுதிச் செயலாளர் ஆ.கே.நீலகண்டன், ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் சிந்தனை செல்வம் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் மீது பொய் வழக்கு தொடரப்பட்டது.

கழக நிர்வாகிகள் மீது தஞ்சாவூர் மேற்கு காவல் நிலைய காவலர்களால் தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் மற்றும் இந்நாள் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை விசாரணை செய்யும் சிறப்பு நீதிமன்றம் மற்றும் தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–1 நீதிபதி இவ்வழக்கினை தொடர் விசாரணை செய்து மக்களின் நலனுக்காக போராடியவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கிலிருந்து குற்றம் சாட்டப்பட்ட அனைத்து நபர்களுக்கும் எதிராக எந்தவித குற்றச்சாட்டும் நிரூபணம் ஆகாததால் மேற்படி வழக்கிலிருந்து அனைத்து நபர்களையும் விடுதலை செய்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இவ்வழக்கில் கழக நிர்வாகிகள் சார்பில் கழக வழக்கறிஞர்கள் எஸ்.ஜெயச் சந்திரன், என்.பூங்கோதை, என்.மனவழகன், இராம.அன்பழகன் ராஜ. அன்பழகன், எஸ்.கார்த்திக், J.ராஜலட்சுமி ஆகியோர் ஆஜராகி வழக்கினை நடத்தினர்.


